பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

16 07 2024 6 45

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. திறன் இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை ஒரு கோடியே 46 லட்சம் பேர் பயன் பெற்றுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2. தமிழகத்தில் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளதாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தெரிவித்துள்ளது.

3. மின்கட்டண உயர்வுக்கு அஇஅதிமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

4. காவிரி பிரச்சினை தொடர்பாக சட்டப்பேரவைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு தமிழக அரசு இன்று அழைப்பு விடுத்துள்ளது.

5. கோவை, நீலகிரி மாவட்டங்களின் சில இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

திறன் இந்தியா திட்டத்தின் கீழ் இதுவரை ஒரு கோடியே 46 லட்சம் பேர் பயன் பெற்றுள்ளதாக மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற உலக இளைஞர் திறன் தின நிகழ்ச்சியில் பேசிய அவர், திறன் மேம்பாட்டில் இந்தியா கடந்த பத்து ஆண்டுகளில் சிறப்பான முன்னேற்றத்தை எட்டி இருப்பதாகத் தெரிவித்தார்.

நிலையான வளர்ச்சியில் இளைஞர்களின் திறன்களின் பங்கு முக்கியமானது என்று அவர் கூறினார்.

வாழ்நாள் முழுவதும் கற்றல் அவசியம் என்று அவர் தெரிவித்தார். புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப பள்ளி நிலையில் இருந்தே திறன் மேம்பாட்டுடன் ஊக்குவிக்க தமது அமைச்சகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக திரு ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் மின் கட்டணங்கள் உயர்த்தப்பட்டுள்ளன.

இதன்படி 400 யூனிட் வரையிலான மின் பயன்பாட்டுக்கு 20 காசுகளும், 401 முதல் 500 யூனிட் வரையில் மின் கட்டணம் 30 காசுகளும், 501 முதல்

600 யூனிட்டுக்கு 40 காசுகளும் கட்டணம் உயர்த்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

601 முதல் 800 யூனிட் வரையிலான பயன்பாட்டுக்கு 45 காசுகளும், 801 முதல் ஆயிரம் வரையிலான யூனிட்டுக்கு 50 காசுகளும், ஆயித்து ஒரு யூனிட்டுக்கு மேல் உள்ள பயன்பாட்டுக்கு 55 காசுகளும் கட்டணம் உயர்த்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

100 யூனிட் வரையிலான இலவச மின்சாரத்தில் எந்த மாற்றமும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர்த்தப்பட்ட மின் கட்டணம் கடந்த ஒன்றாம் தேதி முதல் அமலுக்கு வந்துள்ளதாக தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்துள்ளது.

அதிகரித்து வரும் நிதி இழப்பை ஈடுசெய்ய மின் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

நுகர்வோருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறிய அளவில் மின் கட்டணம் உயர்த்தப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் 2 கோடியே 47 லட்சம் வீடுகளில் ஒரு கோடி மின் நுகர்வோருக்கு தற்போது எந்த கட்டண உயர்வும் இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

மின்கட்டண உயர்வுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், விக்ரவாண்டி இடைத்தேர்தல் நிறைவடைவதற்காக காத்திருந்து மின்கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இந்த மின்கட்டண உயர்வு மக்களை இன்னலுக்கு ஆளாக்கும் எனவும், மின் கட்டணத்தை மீண்டும் மீண்டும் உயர்த்தும் திமுக அரசுக்கு கண்டனம் தெரிவிப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த கட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு. எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான மின் கட்டணத்தை 4 புள்ளி எட்டு மூன்று சதவீத அளவுக்கு உயர்த்தியிருப்பது கண்டிக்கத்தக்கது என பாமக தலைவர் திரு. அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்வாரியத்தில் நிலவும் முறைகேடுகளைக் களையாமல் கட்டணத்தை மட்டும் உயர்த்துவதால் எந்தப் பயனும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மின் கட்டண உயர்வால் ஏழைகளும், தொழில் நிறுவனங்களும் கடுமையாக பாதிக்கப்படுவர் எனவும், இந்தக் கட்டண உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும் திரு. அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

தமிழகத்தில் அடுத்த ஒரு வாரத்திற்குள் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 300 புதிய பேருந்துகள் இயக்கப்படும் என்று மாநில போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சிவசங்கர் தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

காவிரி பிரச்சினை தொடர்பாக சட்டப்பேரவைக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு தமிழக அரசு இன்று அழைப்பு விடுத்துள்ளது.

மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் தலைமையில் சென்னையில் இக்கூட்டம் நடைபெற உள்ளது.

காவிரி ஒழுங்காற்றுக் குழு பரிந்துரைத்துள்ள அளவின்படி நீர் வழங்க இயலாது என கர்நாடகா தெரிவித்துள்ள நிலையில், அது குறித்து இன்றைய கூட்டத்தில் ஆலோசிக்கப்பட உள்ளது.

இன்றைய கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து முடிவு செய்யப்படும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு உட்பட்ட சில இடங்களில் இன்று கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மாநிலத்தின் பிற பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே கோவை மாவட்டம் வால்பாறையில் கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

நீலகிரி மாவட்டத்திலும் தொடர்ந்து கனமழை பெய்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்நிலையில் கர்நாடகாவில் கனமழை பெய்து வருவதால் ஒகேனக்கலுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தடை விதித்துள்ளது.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் பரவலாக பெய்து வரும் கனமழை காரணமாக பேச்சிப்பாறை அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து கோதையாறு மற்றும் தாமிரபரணி கரையோரப் பகுதி மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<>>>>

***<u>இருவரிச் செய்திகள்</u>***

ரஷ்யாவும் சீனாவும் கூட்டுக் கடற்படைப் போர்ப்பயிற்சியை தென் சீனக் கடல் பகுதியில் தொடங்கியுள்ளதாக சீன கடற்படை கூறியுள்ளது.

--------------

சீனாவின் வட பகுதிகளில் தொடர் கனமழையால் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது.

--------------

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கவுன்சிலின் 96-வது நிறுவன தின நிகழ்ச்சியை மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌஹான் புதுதில்லியில் இன்று தொடங்கி வைக்கிறார்.

--------------

தொலைதொடர்புத் துறை ஆலோசனைக் குழுக்களின் இரண்டு நாள் கூட்டத்தை மத்திய தொலைதொடர்புத் துறை அமைச்சர் திரு ஜோதிராதித்ய சிந்தியா புதுதில்லியில் நேற்று தொடங்கி வைத்தார்.

- ஏர்நெட்

பிம்ஸ்டெக் நாடுகளிடையே வானிலை முன்னறிவிப்பில் ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பான இருவார கால பயிலரங்கு, மத்திய புவி அறிவியல் அமைச்சகம் சார்பில் நொய்டாவில் நேற்று தொடங்கியது.

- ஏர்நெட்

காஞ்சிபுரத்தில் தேவாலயங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் நல வாரிய அடையாள அட்டைகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் வழங்கினார்.

- சிவகுமார்

--------------

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் இந்தியன் ஆயில் நிறுவனத்தின் சார்பில் நடைபெற்று வந்த தூய்மை இந்தியா இரு வார விழா நேற்று நிறைவடைந்தது.

--------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையங்களில் வரும் 19-ம் தேதி வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் திருமதி வளர்மதி கூறியுள்ளார்.

--------------

சென்னை மாநகராட்சியின் 6-வது மண்டலத்தில் புதிய வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து மாநில அமைச்சர் திரு சேகர் பாபு தலைமையில் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

--------------

சென்னையில் குற்றவாளிகளுக்கு எதிராக கடந்த 2 நாட்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது 77 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாநகரக் காவல்துறை தெரிவித்துள்ளது.

--------------

*விளையாட்டுச் செய்தி*

தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவையில் நேற்று நடைபெற இருந்த நெல்லை – மதுரை இடையேயான ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டது.

கோவையில் நடைபெறும் இன்றைய ஆட்டத்தில் திருச்சி அணி – கோவை அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**